(வலைபின்னல் மாற்றுமுறை)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1999 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, மஹநுவர பௌத்த வித்தியா பீட்டய (கூட்டிணைத்தல்) சட்டம்

(1999, ஓகத்து மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1999, ஓகத்து மாதம் 13 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 3.50**

**1999 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, மஹநுவர பௌத்த வித்தியா பீட்டய (கூட்டிணைத்தல்) சட்டம்**

[1999 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 12 ஆந் திகதி அத்தாட்சிப் பட்டது.]

ச.வ.–ஓ.48/96.

## மஹநுவர பௌத்த வித்தியா பீட்டயைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

“மஹநுவர பௌத்த வித்தியா பீட்டய” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிலையமொன்று, அதன் உறுப்பினர் களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவனத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்கென கண்டி, தென்னக்கும்புர, குறுதெனியவில் தாபிக்கப்பட்டிருப்பதாலும்; முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவனமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட நிலையத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாலும்; அத் துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாலும்; அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக் கானதாகவிருக்குமாதலாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, மஹநுவர பௌத்த வித்தியா பீட்டய (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது குறித்த மஹநுவர பௌத்த வித்தியா பீட்டயவான (இதனகத்துப்பின்னர் “பௌத்த வித்தியா பீட்டய” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிககை யினரான உறுப்பினர்களாகவுள்ளவர்களும் அத்துடன் இதனகத் துப்பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் “மஹநுவர பௌத்த வித்தியா பீட்டய” என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக் மஹநுவர பௌத்த வித்தியா பீட்டயவைக் கூட்டிணைத்தல்.

H - 022545

கப்பட்ட குழுவாதலும் வேண்டும் ; அத்துடன் அப்பெயர் கொண்டு வழக்குத் தொடக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும். பயன்படுத்தவும் அது அதனை விரும்பியாங்கு மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது. :-

(அ) "மஹநுவர பௌத்த வித்தியா பீட்டய" பிரிவேனாக் கள். பிக்குகளுக்கான பயிற்சி நிறுவனங்கள், பாடசாலைகள் அத்துடன் கல்வி நிறுவனங்களைத் தாபித்து கொண்டுநடாத்துதல் மூலமும் புலமைப் பரிசில்களை வழங்குவதன் மூலமும் கல்வியை மேம்படச் செய்தலும் வளர்ச்சியுறச் செய்தலும் ;

(ஆ) பௌத்த சித்தாந்தத்தையும் அத்துடன் வாழ்க்கை நெறியையும் பாதுகாத்தலும் பரப்புதலும் ;

(இ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள வேறு பௌத்த நிறுவனங்களுடன் சிநேக உறவைப பேணல்;

(ஈ) கீழைத்தேச மொழிகளுக்காகப் பிரிவொன்றைத் தாபித்தலும் அத்துடன் பேணுதலும் ;

(உ) ஆங்கிலம், பிரென்சு போன்ற சர்வதேச மொழி களுக்காகப் பிரிவொன்றைத் தாபித்தலும் அத்துடன் பேணுதலும் ;

(ஊ) சர்வதேச ரீதியில் "தம்ம" வைப் பரப்புவதில் ஈடுபடுதல் ;

(எ) இலங்கையில் இளைஞர்களுக்கான வாழ்க்கைத் தொழில் கல்வியை நடாத்துதல் ;

(எ) சிறு கைத்தொழில்களில் மாணவர்களையும் பயிற்றுவதுடன் அவர்களை நற்குடிமக்களாக்குவதற்காக அவர்களுக்கு நிதி அல்லது வேறு உதவிகளை அளித்தல்;

(ஐ) ஏதேனும் கைத்தொழிலில், வர்த்தகத்தில் அல்லது ஏற்றுமதி அல்லது இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபடுதலும் அத்துடன் கமத்தொழில், கைத்தொழில்,வர்த்தக முயற்சிகளை மேம்படுத்துதலும் கொண்டு நடாத்துதலும் அத்துடன் அத்தகைய முயற்சிகளில் எவரேனும் ஆட்களுக்கு உதவுதலும் துணைபுரிதலும். அத்துடன், தொழில்நுட்ப நுணுக்கங்களைப் பொது மக்களுக்கு வழங்கும் நோக்கில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும் அத்துடன் சேவைகளையும் பிரச்சார செயற்பாடுகளையும் ஒழுங்கு படுத்தலும்;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ள பிக்குமார், தொண்டர்கள் அத்துடன் வேறு ஆட்கள் என்போருக்கும் புலமைப் பரிசில்கள், நிதி போன்றவற்றை வழங்குவதன் மூலம் அல்லது வேறு வழியில் உதவி வழங்குதல் மூலம்;

(ஓ) நூலகங்களை ஏற்பாடு செய்து பேணுவதும் புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவுமலர்கள், பருவ ஏடுகள் முதலியவற்றை வெளியிடுதலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை அடைவதற்கு ஏதுவான அல்லது உகந்தனவான வேறு எல்லாக் காரியங்களையும் கருமங்களையும் செய்தலும்;

(ஔ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள் கலந்துரையாடல்கள், வேலைத்தளங்கள். வகுப்புகள், விவாதங்கள், மாநாடுகள், உல்லாசப் பயணங்கள், சுற்றுலாக்கள் என்பவற்றை அல்லது வேறு நடவடிக்கைகளை மேம்படுத்தலும் ஒழுங்குசெய்தலும் அத்துடன் நடாத்துதலும்;

(க) கூட்டுத்தாபனத்தின நோக்கங்களை ஒத்த நோக்கங் களையுடைய வேறு நிறுவனங்கள், அமைப்புகள் அத்துடன் சங்கங்கள் என்பவற்றுடன் கூட்டுச் சேர்ந்தும் இணைந்தும் செயற்படுதல் ;

(ங) ஆயுள்வேதத்திலும் உள்நாட்டு வைத்தியத்திலும் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான கல்வி நிகழ்ச்சித் திட்டங்களையும் அத்துடன் அதற்கான உயர்கல்வி டிப்ளோமா அல்லது ஏனைய கற்கை நெறிகளையும் ஏற்பாடு செய்து கொண்டுநடாத்துதல் ;

(ச) கல்வி நடவடிக்கைகளைக் கொண்டுநடாத்துகின்ற உள்நாட்டு அல்லது வெளிநாட்டுத் தொழில்நுட்ப அல்லது தொழிற் பயிற்சி நிறுவனத்தின் இணைப்பு நிறுவனமாக அல்லது அமைப்பின் முகவராகச் செயற்படுதல்; அத்துடன்

(ஞ) கூட்டுத்தாபனத்தின் மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு ஏதுவான வேறு எல்லாக் காரியங்களை யும் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும் நடாத்தவும் முடிவுறுத்தவும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணம் கடன் வாங்கவும் அல்லது பணத்தைத் திரட்டவும் மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலை நீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களுட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவைகளுள் ஏதேனும் ஒன்றை சீர்படுத்துவதற்கு அல்லது மேம்படுத்துவதற்குத் தேவையான அல்லது தகுந்த எந்த வகையிலேனும், எல்லாக் காரியங்களையும் செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும் அத்துடன் செயற்படுத்துவதற்குமான தத்துவமும் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கும், அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட, அதிகாரம் வழங்கப்பட்ட பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர் நாயகம், நான்கு உதவிப் பணிப்பாளர் நாயகம், கௌரவ செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்பட்ட வேறு பத்துப் பேருக்குக் குறையாத எண்ணிக்கையானோரைக் கொண்ட பணிப் பாளர் சபையொன்றின் மூலம் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும் வண, தெரிபஹ ஸ்ரீ தம்மாநந்த தேரர் இக்கூட்டுத்தாபனத்தின் சீவிய கால பணிப்பாளர் நாயகமாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவருக்குப் பின் பணிப்பாளர் நாயகமாக அவரை அடுத்துறுபவர், அவரால் பெயர் குறிக்கப்படுதலும் வேண்டும். அவ்வாறு அடுத்துறும் பணிப்பாளர் நாயகமானவரும் சீவியகாலப் பணிப்பாளர் நாயகமாதல் வேண்டும்.

(3) இக்கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபை, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்தவர்களும்; அத்துடன் அவர்களின் பெயரகள் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுமான பௌத்த வித்தியா பீட்டயவின் முகாமைக்குழுவின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமொன்றில் அல்லது அந்நோக்கத்துக்கென கூட்டப்பட்ட ஏதேனும் பொதுக் கூட்டத்தில், இருவார அறிவித்தல் கொடுத்தும், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் பெரும்பான்மை வாக்குக்கொண்டும். கூட்டுத் தாபன உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்க்ள விலகுதல், அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும் பதவிதாங்குநர்களினதும் முகாமைக் குழுவினரினதும் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் என்பவற்றுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், கூட்டுத்தாபன ஊழியர்களின் நடத்தை, கடமைகள், பணிகள் என்பவற்றுக்காகவும், வேறுவகையில் பொதுவாக்க கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அவை அதைப் போன்றதொரு கூட்டத்தில் அதையொத்த முறையில் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், அவற்றுக்குச் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம். கூட்டுத்துபனத்தின் விதிகள்.

(2) கூட்டுத்தாபனத்தின் சகல உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைந்தவர்களாதல் வேண்டும்.

*பௌத்த வித்தியய பீட்டயவினால் செலுத்தப்படற்பாலனவும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்*

**7.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான பௌத்த வித்தியா பீட்டயவின் எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று பௌத்த வித்தியா பீட்டயவிற்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது செலுத்தப்படற்பாலதான சந்தாப் பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்துபனத்தின் இலச்சினை*

**8.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின பணிப்பாளர் நாயகம் மற்றும் செயலாளர் முன்னிலையிலன்றி, எச்சாதனத்திலும பொறிக்கப்படலாகாது; அத்துடன் பணிப்பாளர் நாயகம், செயலாளர் ஆகியவர்கள், அவர்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களைது பெயர்களை எழுதிக்கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல், எவரேனும் சாட்சிக்காராக கையொப்பமிடுவதினின்று தனிவேறான தாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9.** (2) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கொடை, மரணசாதன அளிப்பு, நன்கொடை, அறுதி, உதவுதொகை அல்லது கட்டணங்கள் என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கக் கூடியவாறான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கி அல்லது வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை மறுசீரமைக்கும், அபிபிருத்தி செய்யும் அத்துடன் மேம்படுத்தும், நோக்கத்துக்காக கூட்டுத்தாபனமானது ஏதேனும் தேய்மான நிதியத்தை, ஒதுக்கை அல்லது கடனாழ் நிதியத்தைத் தாபிக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்று வதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட செலவினங்கள் யாவும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**10.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அவிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு வகையாக கூட்டுத்தாபனத்திற்கு உரித்தூக்கப்பட்க்கூடிய அசைவுள்ள. அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும்.

வைத்திருக்கவும் சட்டத்தில் முறைப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள் மூலம், அவர்களில் இருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும். பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**12.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

### பணிப்பாளர் சபை

பணிப்பாளர் நாயகம் :

வண. கல்கெடி வல நந்தரத்ன தேரர்

பிரதிப் பணிப்பாளர் நாயகம் :

கௌரவ ஹரீந்திரநாத் துணுவில

உதவிப் பணிப்பாளர் நாயகம் :

1. திரு. சென் அல்விஸ்
2. திரு. என். கே. ஆர். திலகரத்ன
3. திரு. பீ. டபிள்யு. சமரகோன்

கௌரவ செயலாளர் :

திரு. ஜே. போபிற்றயகே

கௌரவ உப செயலாளர்:

திரு. ஆர்.எம்.டி.பீ. ஆனந்த வீரசூரிய

கௌரவ பொருளாளர் :

திரு. ஜீ.டி. எல். வீலாரத்ன

குழு உறுப்பினர்கள் :

1. திரு. பி. பீ. ராசிங்கொல்ல
2. திரு. செனரத் கல்கடுவ சட்டத்தரணி
3. திரு. ரம்பண்டா தர்மதாச
4. திரு. கே. ஏ. தினபால
5. திரு. தர்மதாச வீரரத்ன
6. திரு. என்.எச்.ஜீ. தர்மதாச
7. திரு. டபிள்யு. எம். ரணதுங்க பண்டார
8. திரு. எம்.வீ. எஸ். சமரதுங்க
9. திரு. டபிள்யு. எம். சமரதுங்க
10. திரு. மகிந்த எக்கநாயக்க

ஏனைய உறுப்பினர்கள்:

1. திரு. எ.வி.டி. விஜேவர்தன
2. திரு. டபிள்யு. கே. டட்லி குணதிலக
3. திரு. தயாந்ந்த வீரரத்ன
4. திரு. ஹென்றி அமரசிங்க
5. திரு. காமினி களுஆரச்சி
6. திரு. எம். டி. நிமல்சிறி
7. திரு. பீ. எச். பெரேரா
8. திரு. பீ. ஜீ. எச். கருணாரத்ன
9. திரு. எச். டபிள்யு ஜினதாச
10. திரு. ரி. காமினி டி. சில்வர்
11. டாக்டர் கே. குசபன
12. திரு. டி. ஈ. பதிரன (கண்டி மேயர்)
13. திரு. காமினி எஸ். வெத்தசிங்க
14. திரு. பி.டி.பி. பதிரன
15. திரு. ஏ.சீ. அபேவீர
16. திரு. ஏ.ஜீ.சீ. தயாரத்ன
17. திரு. அத்துல செனவிரத்ன
18. திரு. இந்திக பிரேமதாச

19. திரு. எச். எம். திசாநாயக்க
20. திரு. குமாரசிங்ஹ பதிரத்ன
21. திரு. மைத்திரி அத்துகோரல
22. திரு. பி.வை. ஜே. செனவிரத்ன
23. திரு. ஏ.ஆர். எம். ரத்நாயக்க
24. திரு. பீ. தொன் சந்திரசேன
25. திரு. எல்.ஜீ. ஜயதிஸ்ஸ
26. திரு. பீ. ஜீ. விஜேரத்ன
27. திரு. எச்.பீ. சமரதுங்க
28. திரு. சுனில் பெரேரா
29. திரு. பி. கே. ஜீ. தசநாயக்க
30. திரு. ஏ.பி. ஏக்கநாயக்க
31. டாக்டர் பீ. டி. எஸ். குறுதெனிய
32. டாக்டர் ஜீ. டபிள்யு கருணாரத்ன
33. திரு. யூ.ஏ. யசரத்ன
34. திரு. என்.எம். நிஷ்ஷங்க
35. திரு. ஏ.சீ. ரத்நாயக்க

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*